[1978 ஏப்ரல் 7

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, பர்மா இலங்கை அகதிகளுக்கு வீடுகள் கட்ட கடன் எவ்வளவு வழங்கப்படுகிறது? வழங்குகின்ற அதிகாரி யார்? கொடுக்கப்படும் கடன் தொகை தவணைமுறையில் வழங்கப்படுகிறது என்றால் எத்தனை தவணைகளில் வழங்கப்படுகின்றன?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: பர்மா, இலங்கையிலிருந்து அகதிகளாக தாயத்திற்கு திரும்பியவர்களுக்கு வீடு கட்டுவதற்குரிய கடனை கோட்டாட்சித் தலைவரும், தனிக் கோட்டாட்சித் தலைவரும் வழங்குகிறார்கள். வீடுகட்டும் கடன் வழங்குகின்ற விஷயத்தில் கிராமப்புறத்தில் இருக்கின்றவர்களுக்கு 3,000 ரூபாய் கொடுக்கப்படுகிறது, இதில் 700 ரூபாய் மான்யமாக கொடுக்கப்படுகிறது, 2,300 ரூபாய் கடனாக வழங்கப்படுகிறது. நகர்ப்புறங்களில் உள்ளவர்களுக்கு 6,000 ரூபாய் கடனாக வழங்கப்படுகிறது, எத்தனை தவணைகளில் இது கொடுக்கப்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். இதில் முதல் தவணையாக 600—ம், இரண்டாவது தவணையாக 2,100-ம், மூன்றாவது தவணையாக 2100-ம், நான்காவது தவணையாக 1,200 மாக வழங்கப்படுகிறது. கிராமப்புறத்திலுள்ளவர்களுக்கு வழங்கப்படுகின்ற கடனைப்பொறுத்தவரையில் முதல் தவணையாக 200 ரூபாயும், இரண்டாவது தவணையாக 700 ரூபாயும், மூன்றாவது தவணையாக 1,050 ரூபாயும், நான்காவது தவணையாக 1,050 ரூபாயும் வழங்கப்படுகிறது.

திரு. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, ஸ்ரீமாவோ பண்டாரநாயகா—சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி இலங்கை தமிழர்கள் அகதிகளாக இன்னும் எத்தனை பேர்கள் வரவேண்டியுள்ளது?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: இன்னும் மூன்றரை லட்சம் அகதிகள் வரவேண்டியிருக்கிறது.

திரு. நா. சுந்தரராஜ்: திருச்சியில் கட்டப்பட்டிருக்கும் வீடுகளைப் போல மற்ற மாவட்டங்களிலும் கட்டிக்கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு செல்வி. பி. டி. சரஸ்வதி; மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், என்னுடைய பதிலை கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன். வீடு கட்டுகின்ற திட்டம் எதுவும் இப்போது இல்லை. எனவே இந்த கேள்விக்கு இடம் இல்லை.

மஞ்சள் ஏற்றுமதி

* 845 வினா— திரு எஸ். கணேசன்: மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1976-77 ஆம் ஆண்டு, வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மஞ்சள் எவ்வளவு?

(ஆ) அதன் மதிப்பு என்ன?

1978 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு.

(அ) 1976-77 ஆம் ஆண்டு வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மஞ்சளின் அளவு 310 டன்கள்.

(ஆ) அதன் மதிப்பு ரூ. 14 இலட்சம்.

மேற் குறிப்பிட்டவை தற்காலிக புள்ளிவிவரங்கள் ஆகும்.

திரு. ரா. க. சு. தண்டபாணி : வெண்தாடி வேந்தன் பிறந்த இடமாகிய ஈரோட்டு மண்ணிலிருந்து தான் இந்த ஏற்றுமதி தொழில் நடந்து வருகிறது. இதில் ஒரு தமிழன் கூட ஈடுபடுவதில்லை. ஒரே ஒரு தமிழர் மட்டும் தான் இருந்தார், கைலாச கவுண்டர் அவர்கள், அவரும் மறைந்துவிட்டார். ஆகவே அங்குள்ளவர்கள் கூட்டுறவு சங்கமாக அமைத்து இந்த ஏற்றுமதித் தொழிலை நடத்த முன் வந்தால் அதற்கு அரசு நிதி உதவி செய்து கொடுக்க முன்வருமா? அமைச்சர் அவர்கள் மஞ்சள் மகிமையை அறிவார்களா? இதற்கு உதவி அளிக்கப்படவேண்டும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசுக்கு மஞ்சள் மகிமையைப்பற்றி நன்ருகத் தெரியும். மேலும் மஞ்சள் ஏற்றுமதி செய்கின்ற தொழிலில் தமிழர்கள் இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ஞர்கள். தமிழர்கள் இதில் இருக்கிருர்களா இல்லையா என்கின்ற விவரம் அரசினிடம் இப்போது இல்லை. எத்தனையோ பேர்கள் இந்த ஏற்றுமதியை செய்து கொண்டிருக்கிருர்கள். சென்னை, தூத்துக்குடி, நாகப்பட்டினம் முதலிய இடங்களிலிருந்து சிங்கப்பூர், மலேசியா, மாலத்தீவு அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஹாலந்து போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்த முறை 1970 லிருந்து 77 வரையும் இருந்து வந்தது. கடந்த 31-3-77 லிருந்து இந்த வியாபாரத்தில் விவசாயிகள் ஊக்குவிக்கப்பட்டுவிட்டதால் இந்தத் திட்டத்தை கைவிட்டு விட்டார்கள். இப்போது விவசாயிகள் அதிகமாக உற்பத்தி செய்து கொண்டிருக்கிருர்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

திரு. வி. கொ. சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அதிகமாக மஞ்சள் பயிராகும் ஏரியா ஈரோடு வட்டம் ஆகும். அப்படி இருக்கும் ஈரோட்டிலே, அதிகமான மஞ்சள் மண்டிகள் இருக்கின்றன. இந்த மஞ்சள் மண்டிக்காரர்கள் விவசாயிகளுக்கு நிறைய முன்பணம் கொடுக்கிருர்கள். சாக்குகள் கொடுக்கிருர்கள். 3% கமிஷன் எடுப்பதாக பில் போடுகிருர்கள். தலைவர் அவர்களே, அப்படி 3% கமிஷன் எடுப்பதாக பில் போடுவதாகச் சொல்லி, 7% கமிஷன் எடுக்கிருர்கள். அது போக வட்டி.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். மூலக் கேள்விக்கு ஒட்டியதாக துணைக் கேள்வி கேட்க்க வேண்டும்; போட வேண்டும். பர்செண்டேஜைப் பற்றிக் கேட்டால் எப்படி? திரு. பழனிவேல்.

திரு. என். பழனிவேல் ; பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மஞ்சள் மகிமையைப் பற்றித் தெரியும் என்று கூறினார்கள். மஞ்சள் இந்த நாட்டு மக்களுக்கு என்னென்ன வகையிலே பயன்படுத்தப்படுகின்றது? அதனுடைய மகிமையைப்பற்றி எனக்குத் தெரியாது. ஆகவே, இதைக் கொஞ்சம் விளக்கி பதில் அளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, மஞ்சளின் உபயோகத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு தெரிந்து வைத்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் வாழ்க்கையிலே தினமும் அதிகமாக மஞ்சளை உபயோகித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஏனென்று சொன்னால், அவர்களுடைய வாழ்க்கைத் துணைவியார், வீட்டிலிருக்கின்ற பெண்களுக்கு இதைப்பற்றி அதிகம் தெரியும். இருந்தும் கூட, வேண்டுமென்றே இந்தக் கேள்வியை கேட்டிருக்கிறார். இருந்தாலும், அவர்கள் வீட்டிலே போய் அவர்களுடைய வாழ்க்கைத் துணைவியாரை கேட்டாலே, நல்ல விடை கிடைக்கும் என்று நினைக்கிறேன்.

திரு. வி. கொ. சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மஞ்சளை விளைவிக்கின்ற இந்த விவசாயிகளுக்கு, மஞ்சள் மண்டிக்காரர்கள் நிறைய முன்பணம் கொடுக்கிறார்கள், சாக்குகளும் கொடுக்கிறார்கள். ஆனால், இந்த மஞ்சள் மண்டிக்காரர்கள் கமிஷன் 3% என்று பில்லிலே கணக்குப் போட்டு வசூல் செய்கிறார்கள், ஆனால், உண்மையில் 7% அவர்களிடத்திலே வசூலிக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அதை மாற்றியமைப்பதற்கு ஆவன செய்ய முடியுமா? அல்லது போலீசாரைக் கொண்டு, சி. ஐ. டி.க்கள் மூலமாக இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய குற்றச்சாட்டை தனிப்பட்ட முறையில் எழுதிக் கொடுத்தால், நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சீரநாயக்கன்பாளையத்தில் நெசவாளர் கூட்டுறவு சங்கம்.

*846-வினு— திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர்

கீழ்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—